**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் OS.No.142/2019 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

பெயர் பாண்டுரங்கன்

த/பெ. ராமலிங்கம்

வயது 70

வசிப்பிடம தாம்பரம்

தொழில் தொலைதொடர்பு துறையில் வேலை (ஓய்வு)

**முதல் விசாரணை 07.07.2025**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 19.11.2018 தேதியிட்ட திருநீலகண்டன் என்பவருக்கு பாண்டுரங்கன் எழுதிக் கொடுத்ததாக கூறும் விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 19.11.2018 தேதியிட்ட திருநீலகண்டன், வைதேகி என்பவருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 29.01.2019 தேதியிட்ட வட்டாட்சியர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட நகர அளவை பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3. 01.02.2019 தேதியிட்ட தாம்பரம் நகராட்சியால் வழங்கப்பட்ட இராமலிங்கம் என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 28.01.2019 தேதியிட்ட தாம்பரம் நகராட்சியால் வழங்கப்பட்ட மூர்த்தி என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 10.01.2019 தேதியிட்ட காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட புகாரின் நகல் மற்றும் ஒப்புகை அட்டை ஒளி நகல் வா.சா.ஆ.6. 10.01.2019 தேதியிட்ட மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட புகாரின் நகல் மற்றும் ஒப்புகை அட்டை ஒளி நகல் வா.சா.ஆ.7. 10.01.2019 தேதியிட்ட பதிவுத்துறை ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட புகாரின் நகல் மற்றும் ஒப்புகை அட்டை ஒளி நகல் வா.சா.ஆ.8. 02.06.2018 தேதியிட்ட அவசரகால சுருக்க பட்டியல் அசல் வா.சா.ஆ.9. 02.02.2019 தேதியிட்ட மருத்துவ சான்றிதழ் அசல் வா.சா.ஆ.10.

27.02.2019 தேதியிட்ட அன்னை அருள் மருத்துவமனை வழங்கிய வெளியேற்ற சுருக்கம் அசல் வா.சா.ஆ.11.

தாவாப்படி தீப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)